அறிவினா லாகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போற் போற்றாக் கடை.—(குறள்.)

"From Wisdom's vaunted lore what doth the learner gain
If as his own he guard no other's souls from pain."

TIT-BITS OF ANIMAL LIFE.

A QUARTERLY ADVOCATE OF HUMANITY FOR SCHOOLS AND FAMILIES.

ஜந்து வர்த்தமான ஸாரம்.

பாடசாலைகளுக்கும் வீடுகளுக்கும் உபயோகப்படும்

ஜீவகாருண்ய விளக்க மும்மாதப் பத்திரிகை.

சம்புடம் VIII.] 1908–ஜூல. [இலக்கம் 2.

காலஞ்சென்ற ஜட்ஜி பாடெம் துரையவர்கள்.

சென்றபத்துவருடகாலமாகச் சென்னை ஜீவஹிம்சை நிவாரணச் சங்கத்திற்கு அக்கிராசனாதிபதியாகவும், ஹைக்கோர்ட்டுஜட்ஜிகளிலொருவராயு மிருந்த கனம்பொருந்திய எச். டி. பாடெம் துரையவர்கள், சென்ற மேமீ 8உ யன்று தேகவியோக மடைந்தனரெனக் கேட்டு நாம் மிகவுந் துக்கிக்கின்றோம். இவர் சென்னையிலுள்ள ஜீவஹிம்சை நிவாரணச் சங்கத்தின் வாயிலாக, வாயில்லா ஜந்துக்களுக்குச் செய்த உபகாரம் இவ்வளவினதென்று சொல்லத்தரமில்லை. இம்மட்டோடு நில்லாமல், இவர் சென்ற 12 வருடங்களாகப் பார்த்துவந்த லௌகிக உத்தியோக வேலைகளேயன்றிப் பலவித அநுகூலங்களும் ஜன சௌக்கியத்தின்பொருட்டுச் செய்ய யுத்தேசங்கொண்டு, சென்னையில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் அநேக சங்கங்களின் வேலைகளையும் தம் சொந்த அலுவலைப்போல் மிக்க சிரத்தையுடனும், விடாமுயற்சியுடனும், அதியுற்சாகத்துடனும், அநுதாபக் கண்களுடனும், சொல்லற்கரிய சிரமந்தாங்கிச் செய்துவந்தனர். இத்தகையினரை நாமிழந்துவிட்டது நாமும், நம் நாடும் செய்த துரதிர்ஷ்டவசமேயன்றி வேறில்லை. இதைப்பற்றி நாம் பின்னும் விசனப்படுகிறோம். மெய்வருத்தம் பாராது, தேகத்தைத் திரணமென மதித்துப் பாடுபட்டுழைக்கவந்த இவர் தம் தேகத்திற்கு, முன்னிருந்த திடனும் போய் வரவரச் சௌக்கியக்குறைவுமுண்டாகவே, தமது அலுவலினின்றும் நீங்கிச் சொந்த நாடாகிய சீமைக்குச் சென்று தம் குடும்பத்தாருடன் சிலநாளிருந்து சுகமாய்க் காலங்கழிக்க வேண்டுமென்ற எண்ணம் இவர் மரிப்பதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னரே இவர் மனதிலுதித்தது. அவ்வண்ணமே அவர் நிச்சயித்துக்கொண்டபொழுதே ஜனங்கள் மனதில் ஒருவிதத் திகிலும் வருத்தமும் உண்டாயின. பாடெம் துரையவர்கள் இவ்வித உத்தேசத்துடன் சென்ற மேமீ 7உ யன்று மாலை சென்னையினின்றும் புறப்பட்டு ரெயில் மார்க்கமாகப் பம்பாய் சென்று, அங்கிருந்து கப்பல் மார்க்கமாகப் போய்த் தம் நாடு செல்லலாமென வெண்ணிச் செல்லுங்காலை, புறப்பட்ட மறுதினமாகிய 8உ யன்றே அதிகாலை ரெயில் வண்டியிலேயே ராய்ச்சூருக்குச் சமீபத்தில் மரணமடைந்தனர். இந்த துக்ககரமான

சங்கதியைக் கேட்க சென்னை ஜீவஹிம்சை நிவாரண சங்கத்தவரும், மற்றும் அவர் நேசித்திருந்த பல சங்கத்தவரும், நண்பரா யுள்ளவர்களும், இன்னுமிந்நாட்டுக்கு எவ்வளவோ பாடுபட்டுழைப்பார் என்று நம்பியிருந்தவர்களும் ஏக்கங் கொள்ளலாயினர். இந்தச் சம்பவத்தைப்பற்றி இவரது மனைவி மக்களுக்கு நாம் நம்முடைய அநுதாபத்தை மிக விசனத்துடன் தெரிவிக்கின்றோம். கடவுளா லுண்டாக்கப்பட்ட பிறப்பு, இறப்பு என்ற சுக துக்கங்கள் சமனிடையாயிருத்தல் சகஜமாதல்பற்றியும், எல்லோரும் மரணத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கவேண்டியது நிச்சயமாதல் பற்றியும், இவையெல்லாம் கடவுட் செயலால் அணுவும் பிசகாது நடக்கின்றன வாதல் பற்றியும், "கணமதனிற் பிறந்திறுமிக் காயத்தின் வரும்பயனே, உணர்வுடையா ரறிவர் உணர் வொன்றுமிலார்க் கொன்றுமில்லை" என்றார் ஸ்ரீ பரஞ்சோதி முனிவர், "விச்சதன்றியே விளைவுசெய்குவாய் விண்ணுமண்ணகம் வைச்சுவாங்குவாய்" என்றார் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள். இதனால் நாம் முக்கியமாய்க் கவனிக்கவேண்டிய அம்சம் ஒன்றுளது. ஜட்ஜி பாடெம் துரையவர்கள் பிறந்திறப்பதற்கு முன் எவ்வளவு காரியங்களைச் செய்தார் என்பதைக் கவனித்து, நாமும் அவர்போலுழைத்தால் மட்டும் அவருக்காக நாம் காட்டும் விசனக்குறி யுண்மையாகுமேயன்றி வீணில் சிந்திப்பதில் பயனில்லை. எடுத்த தேகத்தாலும் பெற்ற பொருளாலும் பலருக் குதவுவதே உத்தமர்களின் நோன்பு. அதுவே பேரும் கீர்த்தியுமாகும்.

கனம்பொருந்திய பாடெம் துரையவர்கள் தம் தேசமான இங்கிலாந்தில் பாரிஸ்டர் வேலையில் விசேஷ கீர்த்தியடைந்து, 1896-ஹு ஜ-லைமீ 6உ சென்னை ஹைக்கோர்ட்டில் ஜட்ஜிவேலையில் பிரவேசித்தார். இங்கே வந்த இரண்டு வருடங்களுக்கெல்லாம் 1898-ஹுத்தில் ஜீவஹிம்சை நிவாரண சங்கத்திற்கு அக்கிராசனாதிபதியானார். இச்சங்கத்தின் ஜீவகாருண்ய வியாபார விவகாரங்கள் இவர் அக்கிராசனாதிபதியாவதற்குமுன் ஜனங்களுக்குப் பிரசித்தியாகத் தெரியாமலும் இச்சங்கத்தின் பேரில் ஜனங்களுக்குக் கொஞ்சம் வெறுப்புண்டாயுமிருந்தது. இவருடைய இடைவிடாத முயற்சிகளால் இச்சங்கம் மிகவும் விருத்தியடைந்ததென்று சொல்லுவதற்கு அநேகங் காரணங்களிருக்கின்றன. அவை யாவையெனின், ஆதியில் இச்சங்கமிருப்பதற்காவது, அதன் சபைகள் கூடுவதற்காவது தகுதியானவிடம் பிரத்தியேகமாக இருந்ததில்லை. இப்பொழுதோ மேலான சொந்த கட்டடமொன்று கட்டப்பட்டிருக்கிறது. ஆதியில் இச்சங்கத்தார் ஜீவஹிம்சை நிவாரணத்தின்பொருட்டுச் சில வேலையாட்களை வைத்துக்கொண்டு, காயங்கள், புண்கள் முதலானவைகளால் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் ஜந்துக்களால் ஜனங்கள் வேலைகளைச் செய்துகொள்ளாமல்மாத்திரம் பார்த்துவந்தார்கள். இப்பொழுது மேற்சொன்ன வேலைகளுடன்கூட, மாடுகள், நாய்கள், குதிரைகள் முதலான ஜந்துக்களுக்கு வியாதி நிவாரணை செய்யும்பொருட்டு வைத்தியசாலை யொன்றும், அதற்குப் பிரத்தியேக சிப்பந்திகளுங்கூட ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இதுதவிர மூப்பினாலாகிலும், ஜாட்டிய பலஹீனங்களாலாகிலும் வேலைசெய்யச் சக்தியில்லாத ஜந்துக்கள், அவைகளின் ஆயுள்பரியந்தமிருந்து நிர்ச்சிந்தையுடன் சுயேச்சையாகத் திரிந்து புற்களை மேய்ந்துகொண்டிருக்கும்பொருட்டுப் பிரத்தியேகமாகப் பஞ்சரபோலென்னும் ஜந்துக்களின் ஆசிரய மொரு தோட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் சென்ற பத்து வருடங்களுக்குள்ளாக ஜட்ஜி பாடெம் துரையவர்களின் முயற்சியாலும், சிரத்தையாலும், அநுதாபத்தினாலுமே நிறைவேறினவென்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. இச்சங்கமே யல்லாமல் பாடெம் துரையவர்கள் தம் உத்தியோகத்தொழிலில் கழித்தகாலம் போகத் தம் மீத அவகாச காலங்களையெல்லாம் சென்னையின் அநேகஞ் சங்கங்களுக்கு அக்கிராசனாதிபதியாகவிருந்து, அச்சங்கங்களையும் ஜீவஹிம்சை நிவாரண சங்கத்தைப்போலவே மேன்மையடையும்படிச் செய்துவந்தார். இவ்வாறு தம் அவகாசத்தையும்கூட வீணாகக் கழிக்காமல், யாவருடைய நன்மையின்பொருட்

டும் அவருபயோகித்துப் பாடுபட்டு வந்த
தினுல் இவ்விராஜதானியில் சகல வருணத்
தர்களும், சகல மதஸ்தர்களும் இவர்பேரில்
மிகப் பிரீதியுடையவர்களாயிருந்தார்களெ
ன்பது ஆச்சரியமன்று. இவ்வளவு சர்வ
ஜனப் பிரியராகவிருந்த ஜட்ஜி பாடெம்
துரையவர்கள், சீமைக்குச் செல்லத் தயா
ரானவுடன் அவருடன் சம்பந்தப்பட்டிரு
ந்த சங்கத்தார்களும், மற்றவர்களும் பல
தினங்களில் பல விடங்களில் இவரைக்
கௌரவப்படுத்தும் நிமித்தமாக விருந்துக
ளளித்தனர். அவர்களில் சிலவற்றைக் கீழ்
விவரித்தாகிலும் நம் துக்கத்தைச் சிறிது
ஆறுதல் செய்துகொள்வோமாக.

மகமதியர்களின் அபிவிருத்தியின்பொ
ருட்டும் அம்மதஸ்தர்களின் ஏழைப் பிள்
ளைகளுக்குக் கொஞ்சம் வித்தையையும்
அவர்களின் ஜீவனத்திற்கு உபயோகப்ப
டத்தகுந்தசில தொழில்களையும் கற்பிக்கும்
பொருட்டும் ஏற்படுத்தப்பட்டிருக்கும் அஞ்
ஜுமானென்னும் சங்கத்தார் பாடெம்துரை
யைக் கௌரவிக்கும்படியாகச் சென்னை
மவுண்ட்ரோட்டிலிருக்கும் அச்சங்கத்தின்
கட்டடத்தில் சென்ற ஏப்பிரல்மீ 29உ
ஒரு பெரிய சபை கூட்டினுர்கள். அச்
சபையில் பாடெம் துரையவர்கள் மிக
வும் விநயத்துடன் அங்கு வந்திருந்தவர்க
ளுடன் சம்பாஷித்தபிறகு, மாட்சிமை
பொருந்திய ஆற்காட்டு நவாபு அவர்கள்
துரையைப் புகழ்ந்து சில வார்த்தைகள்
சொல்ல, துரையவர்களும் சபையோர்க
ளைப்பார்த்து விசேஷ உற்சாகத்துடன் மேற்
சொன்ன சங்கத்தின் காரியங்களில் மக
மதியர்களேயன்றி இதரமதஸ்தர்களும் சிர
த்தை யெடுத்துக்கொண்டு பாடுபடவேண்
டிய அவசியத்தை விளக்கிப் பதில் சொன்
னுர்கள்.

மறுநாளான ஏப்பிரல்மீ 30உ சாயுங்
காலம் திருவல்லிக்கேணியி லிருக்கும்
ஸ்ரீ பார்த்தசாரதி சுவாமியின் வசந்தோற்
சவ பங்களா தோட்டத்தில் சென்னை ஹைக்
கோர்ட்டு லாயராகிய ம-ா-ா-ஸ்ரீ, எம்.
ஓ. அளகசிங்காசாரியார் பாடெம் துரை
யவர்களுக்கு ஒரு விருந்தளித்தனர். அச்
சமயத்தில் வந்திருந்த அநேகம் துரை
மார்கள், துரைசானிகள் நடுவில் பாடெம்
துரையவர்கள் நின்றுகொண்டிருக்க, ஒரு
புகைப்படம் எடுக்கப்பட்டது. பிறகு
கொஞ்சநேரம்வரை ஒரு சிறுமி வீணைகா
னம் செய்யும்போது, வந்திருந்தவர்களெல்
லாரும் சுந்தரமான விருக்ஷங்களின் கீழ்
போடப்பட்டிருந்த ஆசனங்களில் உட்கார்
ந்துகொண்டு பலவித பலகாரங்களையும்
பானங்களையும் அருந்தினுர்கள். கடைசி
யில் துரையவர்களுக்கு ஒரு விநோதமான
பெரிய புட்பமாலை போட்டு அவரை ஜனங்க
ளெல்லோரும் மிக உற்சாகத்துடன் ஆசீர்
வதித்தனுப்பினுர்கள்.

மகமதிய பாலகர்களின் வித்தியாப்பியா
சத்தின்பொருட்டுப்பாடெம்துரையவர்கள்
விசேஷ சிரத்தையுடன் பாடுபட்டதற்கா
கத் தங்கள் நன்றியறிதலைக் காட்டப் பாட
சாலையில் படிக்கும் அநேகம் மகமதியப்
பாலகர்கள் ஒன்றுசேர்ந்து "உம்தா பாக்"
என்னும் தோட்டத்தில் சென்ற மேமீ
முதல்தேதியன்று துரையவர்களை வரவழை
த்துச் சந்தோஷம் கொண்டாடினுர்கள்.
அச்சபையிலும் யாவரும் துரையவர்களின்
சற்குண சற்காரியங்களைப் புகழ்ந்ததற்குத்
துரையவர்கள் அப்பாலகர்களுக்குபயோக
மான புத்திமதிகளைப் போதித்தார்.

ஜீவஹிம்சை நிவாரண சங்கத்தாரும்,
தென் இந்தியா தேகாரோக்கிய அப்பி
யாஸ சங்கத்தாரும் சேர்ந்து, சென்னையில்
பீபில்ஸ்பார்க்கென்னும் தோட்டத்தில்
மேமீ 5உ இரவு கனவான்களெல்லாரை
யும் வரவழைத்துப் பாடெம் துரையவர்
களுக்குச் செய்த மரியாதைகள் மிகவும்
மேன்மையாகவிருந்தன. பின்குறித்த சங்
கத்தின் விசாலமான மண்டபத்தில் வந்த
வர்களெல்லோரும் கூடியபோது மேற்
சொன்ன இருசங்கங்களின் காரியதரிசிக
ளும் பாடெம் துரையவர்களுக்கு உபசாரப்
பத்திரங்கள் படித்தபின்பு, ஹைக்கோர்ட்டு
முதல் ஜட்ஜியவர்களாகிய கனம்பொருந்
திய சர் சார்லஸ் ஆர்னுல்டு ஒயிட் துரைய
வர்கள் எழுந்து பாடெம் துரையவர்களின்
பேரில் ஜனங்களுக்கிருக்கும் பிரீதியைக்
குறித்து மிகவும் புகழ்ந்து சுபவார்த்தைக
ளாடிப் பாடெம் துரையவர்களின் நூதன
உருவப்படமொன்று அவ்விடத்தில் திரை
போடப்பட்டிருந்ததை எல்லோருக்குங்

தெரியும்படித் திறந்தனர். பாடெம் துரையவர்களும் தாம் இத்தேசத்தை விட்டுப் போகவேண்டுமென்ற விசனத்தையும், தம்மை இவ்வளவு கௌரவப்படுத்தினதற்காகத் தமக்கிருந்த ஆனந்தத்தையும் நன்றியையும் தெரிவித்துப் பதில் கூறினர். பிறகு ஜனங்களெல்லோரும் விசாலமான தோட்டத்தில் தங்கிப் பலவித சிற்றுண்டிகளருந்திப் பலவித தீபங்களுடன் கூடின நிலா வெளிச்சத்தில் நடமாடிக்கொண்டு கொடி, குஸ்தி, ஜாலவித்தை முதலான வேடிக்கைகளையும் பார்த்துக்கொண்டிருந்தார்கள். கடைசியில் விசித்திரமான பாணவேடிக்கைகளும் நடந்தன.

அன்றிரவு பாடெம் துரையவர்களுக்கிருந்த தேக நிலைமையானது சுரத்தினல் பீடிக்கப்பட்டுச் சிறிது குறைவாயிருந்ததென்றாலும், இன்னும் இரண்டு தினங்களுக்குள் அவர் காலஞ்சென்று விடுவாரென்று அவ்வளவு பெரிய சபையிலிருந்த ஒருவராகிலும் சொப்பனத்திலும் நினைத்திருக்க மாட்டார்களல்லவா? அவர் காலஞ்சென்று விட்டாரென்னும் துக்க சமாசாரம் சென்னைக் கெட்டின காலை ஹைக்கோர்ட்டிலும், இதர நியாயஸ்தலங்களிலுமிருக்கும் ஜட்ஜிகளும், லாயர்களும், பாரிஸ்டர்களும், வக்கீல்களு மொன்றுகூடி இச்சம்பவத்தைக் குறித்து மிகவும் விசனப்பட்டார்கள். பாடெம் துரையவர்களின் பிரேதம் மேமீ 9௳ சனிக்கிழமை காலை சென்னைக்குக் கொண்டுவரப்பட்டு, 7 மணிக்கு ஸெயின்ட் ஜார்ஜ் கத்தீட்ரல் என்னுமிடத்தில் அடக்கம் செய்யப்பட்டது. கருணை நிறைந்த கடவுள் இந்த மேன்மையான துரையவர்களின் ஆத்துமாவை ரக்ஷித்து அதைச் சுகமான பதவியில் சேர்ப்பிப்பாராக!

சுகனும், இராக்ஷதனும்.

சுகனென்பவன் எப்பொழுதும் ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் சந்தோஷமாக ஜீவித்துவருவான். அவன் ஒருநாள் தன் வீட்டைவிட்டுக் கொஞ்சதூரம் காடுகளில் சஞ்சரிக்க வேண்டுமென்னும் ஆசைகொண்டு காடுகள் எதிரொலியிடும்படியாகப் பாடிக்கொண்டு அதிக குதூகலத்துடன் வெளியே சென்றான். அவன் அவ்வாறு போய்க்கொண்டிருக்கும்போது காட்டின் நிர்மலமான ஒரு நீர்க்காலின் சமீபத்தில் சேர்ந்து தாகத்தைத் தணிக்கக் குனிந்தான். அச்சமயத்தில் அவன் பின்பக்கத்திலிருந்து அவனைப் பார்க்கிலும் நூறுமடங்கு பெரிய ஆகாரமுடைய ஒரு இராக்ஷதன் அவனைத் தன் கையில் பிடித்துக்கொண்டான். அவ்விராக்ஷதன் சுகனைப் புன்சிரிப்புடன் பார்த்து அவனைத் தன் பெரிய பையில் போட்டுக்கொண்டு போனான். சுகனனவன் தன்னாலானமட்டும் தப்பித்துக்கொள்ளப் பிரயாசைப் பட்டதெல்லாம் வியர்த்தமாய்விட்டது. அவன் கூச்சலிட்டுக் கத்திக் கைகால்களை யடித்துக்கொண்டு பையைக் கிழிக்க உத்தேசித்தான். இவன் இவ்வாறுசெய்யும் வீண் பிரயாசைகளைப் பார்த்து இராக்ஷதன் சிரித்தான். கடைசியில் இராக்ஷதன் செடிகளும் புஷ்பங்களுமில்லாமல் நாற்புறமும் சுவர்களால் சூழப்பட்ட இருளடைந்த தன் வீட்டுக்கு வந்து சேர்ந்தான். அவன் உள்ளே வந்த உடனே, கதவைமூடிச்சுகனைப்பையிலிருந்து வெளியே எடுத்தான். எவரும் திக்கில்லாத அச்சுகன் தனக்கு அந்தியகாலம் சமீபித்ததென்றெண்ணினன்; ஏனென்றால் சுற்றிப் பார்க்கையில் தன்னைவிடப் பெரிய தேகத்தையுடைய இருவர், இராக்ஷதனுடைய ஆகாரத்திற்காகத் தன் சமீபத்திலிருந்த நெருப்பில் சுடப்பட்டுக்கொண் டிருந்தார்கள். ஆனல் இராக்ஷதன் சுகனைக் கொல்லாமல் தன் வீட்டில் ஏற்படுத்தப்பட்டிருந்த ஒரு சிறைச்சாலையில் அடைத்துவைத்தான். அச்சிறையில் வெளிச்சமே யில்லாமல் நாற்புறங்களிலும் கம்பிகள் போடப்பட்டு அதற்குள் ஒரு காய்ந்த ரொட்டித்துண்டும், ஒரு பாத்திரத்தில் கொஞ்சம் ஜலமும் வைக்கப்பட்டிருந்தன. சுகன் முன்னும் பின்னும் போய்க்கொண்டு கம்பிகளின்பேரில் தலையை யடித்துக்கொண்டிருந்தான். மறுநாள் சுகன் ஒன்றும் தின்னமலிருப்பதை இராக்ஷதன் பார்த்துச் சுகனுடைய தலையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு கொஞ்சம் ரொட்டியை அவன் வாயில் நுழைத்தான். இதனல் சுகனுக்கு மறுபடியும் கொஞ்சம் பயம் அதிகரித்தது. அத்தினமெல்லாம் இருட்

டில் அவன் தனிமையாக விடப்பட்டுக்காலத்தைப் போக்கினன். அநாதையான சுகன் தன் வீடு, சிநேகிதர்கள், செடிகள், புஷ்பங்கள் முதலானவைகளை நினைத்துக்கொண்டு விசனப்பட்டுக்கொண்டிருந்தான். மறுபடியும் அவ்விராக்ஷதன் வந்து எப்போதும் போலவே ஆடிப்பாடிக் குதூகலமாக விருக்கும்படி அச்சுகனுக்குச் சொல்லியும் அவன் கேட்காமல் விசனத்தினுல் மனம் நொந்து பாடமுடியாமலிருந்தான். பாட்டுகள்பாடச் சிறைச்சாலேயோ தகுந்தவிடம்? கடைசியில் இராக்ஷதன் கைகளிலேயே பிராணனை விட்டான். மேல்சொன்ன கதையில் சுகன் ஒரு அழகான கிளி, இராக்ஷதனே குரூரனன ஒரு பாலன்.

ஒட்டகத்தி னுபயோகம்.

ஒட்டகத்துக்குப் பாலேவனக் கப்பலென ஒருபெயர்வழங்கும். கப்பல்இன்றிஎப்படிச் சமுத்திரம் கடக்கக்கூடாதோ அப்படியே ஒட்டை இல்லாமல் பாலேவனத்தைக் கடப்பது அசாத்தியம்என்பதைப்பரிஷ்காரமாய்க் குறிக்கின்றது. ஆகாரம் கிடையாத வனந்தரங்களில் பட்டினியாகவே நாட்பட நடந்து உழைப்பதற்கு அதன் உறுப்புகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. தட்டையும் கடற்பஞ்சொப்ப மெதுவுமாய் நேர்ந்திருக்கிற அதன் பாதம் மணல்தரையில் புதையாது வெயிலில் வெடிக்காது இருக்கும். தீனி இல்லாவிடின் முசுப்புக் கரைந்து அதன் பிராணனைத் தாங்கும். தண்ணீரைச் சேர்த்துவைத்துக்கொள்ளுகிற சாதனங்கள் அதன் உடலில் இருக்கின்றன; பிரயாணம் நீடித்தாவது நடுவழியில் ஜலம் செலவழிந்தாவது, தண்ணீருக்குத் தவிக்கும் தருணங்களில் பிரயாணிகள் ஒட்டையைக் கொன்று அதன் நீர்ப்பையில் நிற்கிற தண்ணீரைக் குடித்துமிருக்கிறார்கள். ஒட்டை சொற்பத்தில் கோபங்கொண்டு குரோதம் வைத்திருந்து சமயம் வாய்க்கும் போது தன்னைக் கெடுதிசெய்தவனை வாயால் கவ்வித் தூக்கித் தரையில் எறிந்து காலால் மிதித்துக் கொல்லும். இதற்கு உபாயமாகப் பாகர்கள் ஒட்டை கோபமாய் இருக்கிறதென்று அறிந்தால் தாங்கள்போர்த்துக்கொண்டு தூங்குகிற பாவனையாய் அதன் மார்க்கத்தில் தங்கள் வஸ்திரங்களை உருப்படுத்திவைக்க, அவைகளை அது கடித்துக் கிழித்து வர்மம் தீர்த்துக்கொண்டபிற்பாடு முன்போல நெருங்கி அதை நடத்துவார்கள். ஒட்டகம் இருக்கிற தேசங்களில் அதன் பாலும்இறைச்சியும் உணவாகும். வருஷாவருஷம் கத்தரிக்கிற அதன் மயிர் கம்பளம் நெய்து உடுத்திக்கொள்வதற்கு உதவும். ஆதிதொடங்கி மனிதர் இம்மிருகத்தைப் பழக்கித் தங்களுக்கு உபயோகித்துக்கொண்டு வருகின்றமையால் அது ஓரளவு தார்த்தாரி தேசத்துக் காடுகளில் தவிர மற்றெங்கும் காட்டுமிருகமாய் அகப்படாது. அரபி ஒட்டகத்துக்கு முசுப்பு ஒன்று, தார்த்தாரி ஜாதிக்கு இரண்டு.

கோட்டயத்தில் நடந்த கால்நடைகளின் காட்சி.

திருவாங்கூர் மஹாராஜா அவர்களின் இராச்சியத்தில் கோட்டய மென்னு மோர் பட்டணத்தில் சென்ற மார்ச்சுமீ 21உ முதல் 3 நாட்கள் கால்நடைகளின் காட்சியொன்று நடத்தப்பட்டது. அக்காட்சி தொடக்கத்தில் திவான் பேஷ்கார் என். சுப்பிரமணிய ஐயரவர்கள் இப்படிப்பட்ட காட்சிகளை இராச்சியத்தில் அடிக்கடி நடத்துவது, அந்த இராச்சியத்திலுள்ள ஜனங்கள் தம் கால்நடைகளிடத்தில் விசேஷ அன்புண்டாகி அவைகளைச் சிரத்தை பக்தியோடு பாதுகாத்து அவைகளின் அபிவிர்த்திக்காகத் தக்க முயற்சி செய்வதற்குக் காரணமாயிருக்குமென்கிற அம்சம் முதலான விஷயங்களைப்பற்றி உபந்நியாசம் செய்தார்.

இக்காட்சிக்குப் பலரால் கொண்டுவரப்பட்ட எருதுகள், பசுக்கள், எருமைகள், கன்றுக்குட்டிகளையும், வெள்ளாடு, செம்மறியாடு அவைகளின் குட்டிகளையும், பால், தயிர், ஆடை, வெண்ணெய் முதலியவற்றையும் பரிசீலித்து அவைகளில் சிரேஷ்டமானவைகளுக்குத் தகுந்த சன்மானங்கள் கொடுப்பதை ஏற்பாடுசெய்ய அக்காட்சிக்கு வந்திருந்த கனவான்கள் பலரை நியமித்திருந்தார்கள். பரிசளிக்கப்பட்ட மொத்தம் ரூ. 210. இதுதவிர, கால்நடைகளின் சம்ரக்ஷணை யபிவிர்த்திகளைக் குறித்துச் செய்ய வேண்டிய தகுந்த யோசனை, முயற்சிகள்

முதலியவைகளைப்பற்றி எழுதிய வியாசங்களில் சிரேஷ்டமான இரண்டுக்கும் வியாசம் ஒன்றுக்கு 25 ரூபாயாகச் சன்மானங்கள் கொடுக்கப்பட்டன. அக்காலத்தில் வெனரபில் ஆர்ச்டீகன்பால்மர் துரை யென்னும் ஓர் பிரசித்தமான பாதிரியவர்கள் மிக்க உபயோகமான இனிய சம்பாஷணையுஞ் செய்தார். கடைசியில் ஆஸ்குய்த் என்னும் துரைசானியவர்களால் வெகுமதிக ளவரவர்களுக்குக் கொடுக்கப்பட்டன.

யானையின் சூக்ஷ்ம புத்தி.

அநேக விடங்களுக்குச் சென்று அந்தந்தப் பிரதேசங்களில் தென்படும் விசேஷமான விசித்திரக் காட்சிப் படங்களை யெழுதிக்கொண்டுவந்த ஒரு ஆங்கிலேய துரையானவர், தாம் சவாரிசெய்து கொண்டுபோன தமது யானையைக்குறித்துச் சொல்லியிருக்கும் சங்கதிகளைக் கேட்க மிகவும் விநோதமாக விருப்பதால் அவைகளை இதனடியில் கூறுகின்றனம்.

"என் யானையின்பேரில் வெகுதூரம் பிரயாணம் செய்தேன்; நான் எவ்வெவ்விடத்தில் விநோதங்களைக் கண்டு படங்களை எழுதிக்கொள்ள விரும்புவேனோ, அவ்வவ்விடங்களில் அதுவரையில் என் யானை இப்படியப்படி யசையாமல் நின்றுகொண்டிருக்கும். என் கைக்கெட்டாத மாம்பழங்களை நான் கோரினால், உடனே அது நல்ல பழங்களிருக்கும் கிளையை யொடித்துத் தன் துதிக்கையால் எனக்குக் கொடுக்கும். ஒருவேளை அதற்கு நான் கொஞ்சம் பழங்களைக் கொடுத்தால், அது மூன்றுதரம் தன் துதிக்கையைத் தன் தலைமீதில் வைத்து எனக்கு வந்தனம் செய்யும். எப்பொழுதாகிலும் என் வழியிலே ஏதாவது மரக்கிளைகள் குறுக்கிட்டால் அவைகளை யது தன் துதிக்கையால் ஒடித்துவிடும். காலையில் நான் போஜனம் செய்யும்போது என்னிடத்திலிருந்து பழங்களையும், கற்கண்டையும் பெற்றுக்கொள்வதற்கு என் கூடாரத்தின் சமீபத்தில் வந்து காத்துக்கொண்டிருக்கும். என் பங்களாவிலிருந்து சமீபத்திலிருக்கும் ஒரு பட்டணத்திற்குப்போகும்போது அந்தயானை ஒருசிறிய வாராவதியைத் தாண்டுவது வழக்கம். ஒரு நாள் அது வழக்கம்போல் வாராவதியின் பேரில் செல்லாமல் நின்றுகொண்டிருக்கும் போது யானைப்பாகன் அதைக் குத்தி அவ்வாராவதியின்பேரில் செல்லும்படி பலாத்காரம் செய்தான். பின்பு அவ்வாராவதியின் பலத்தைத் தன் துதிக்கையால் முதலில் பரீக்ஷித்துப் பார்த்துக் கொஞ்சம் சந்தேகத்துடனே அதன்பேரில் சென்றது. அவ்வாறு அது செல்கையில் வாராவதியைத் தாண்டுவதற்கு முன்பே, அவ்வாராவதி யுடைந்து விழுந்துவிட்டது. யானையும், அதன் பாகனும் பள்ளத்தில் விழுந்துவிட்டார்கள். உடனே யானைப்பாகன் காயத்தினால் மரணமடைந்தான். யானைக்கும் கடுங்காய முண்டாயிற்று.

நானிருந்த ஒரு பட்டணத்தின் கடைத்தெருவில் ஒரு திக்கில்லாத ஸ்திரீ பழங்களை விற்றுவந்தாள். ஒரு யானை அவ்வழியாய்ச் செல்லும்பொழுதெல்லாம் அந்த ஸ்திரீயின் கடையின் சமீபத்தில் கொஞ்சநேரம் நிற்பது வழக்கம். அந்த ஸ்திரீயும் யானைக்குப் பழங்களின்பேரில் மிக்க பிரீதியென்றறிந்து, அதற்குத் தினமும் சில பழங்களைக் கொடுத்துவந்தாள். ஒருநாள் அந்த யானை மதங்கொண்டு கட்டவிழ்த்துக்கொண்டு கடைகளெல்லாம் சுற்றிக்கொண்டு வழியிலிருந்த சாமான்களையெல்லாம் மிதித்துக்கொண்டு வந்தது. கடைகளிலிருந்த ஜனங்களெல்லாம் ஓடிப்போனார்கள். இந்த ஸ்திரீயும் பயப்பட்டுத் தன் கடையைவிட்டுப் போகும் போது தன் குழந்தையைக் கடையண்டையே விட்டு மறந்தோடிப் போய்விட்டாள். அக்குழந்தை யானை செல்லும் வழியிலேயே இருந்ததனால் அந்த யானை அக்குழந்தையை மிதித்துவிட்டிருக்குமென்று நினைக்கக்கூடும். ஆனால் யானையானது குழந்தையைப் பார்த்துத் தான் தினமும் நின்று பழம் வாங்கும் கடையென்றறிந்து அக்குழந்தையைத் தன் துதிக்கையா லெடுத்துக்கொண்டு பாதையோரத்தில் கிடத்திவிட்டுத் தன் வழியாய்ச் சென்றது. மறுபடியும் அந்த ஸ்திரீ தன் குழந்தை க்ஷேமமாகவிருப்பதைக் கண்டபோது எவ்வளவு சந்தோஷப்பட்டிருப்பாளென்பதை யோசியுங்கள்."

யோகஞ் செய்யும் சில ஜீவஜந்துக்கள்.

ஒரு பத்திரிகையில் கூறியிருக்கும் சில ஜீவஜந்துக்களின் சாதனைகள் மிக்க வியக்கத்தக்கனவாயிருப்பதால், அவற்றை இதனடியில் கூறுகின்றனம்.

நமது பங்களாவைச் சுற்றி மாரிகாலத்திரவில் "க்ணங் க்ணங் கணக்ண" வென்று சுரம் வைத்துப் பாடும் தவளையை நம்மவர்களிற் பலருங் கண்டிருப்பார்கள். அதற்கு வயிறு பெருத்துத் தலை சிறுத்திருக்கும். அது கண்ணைப் பறிக்கு மழகிய வர்ணமுடையது. வெகு துரிதமாய் மண்ணைப் பரிக்குங் கால்களுடையது. இரண்டங்குல மழையாவது பெய்தாற்றான் அது தரையின் கீழிருந்து மேல்வரும். மற்றக் காலங்களில் தரைமட்டத்திற்குக் கீழ் மூன்று நான்கடி தாழ்ந்து பாழில் வசிக்கும். தரையின்மேல் நான்கு மாதமும் தரையின்கீழ் எட்டு மாதமுங் காலங்கழிக்கின்றது. மாரிகாலத்தில் மாத்திரந்தான் உண்பதும் வாழ்வதும் குஞ்சு பொரிப்பதுமாம். கோடை முழுவதும் தரையின்கீழ், அன்னுகாரமின்றிச் சுவாசம் நிறுத்தி அகோரமான யோகத்திலிருக்கும்.

மாரிகால முழுவதும் பனிக்கட்டியால் மூடப்பட்ட உத்தரப் பிரதேசங்களில் உள்ள வெண்கரடி முதலிய சில பிராணிகள் அம் மாரிகாலஞ் செல்லுமட்டும் அன்னமாகாரமின்றி மண்ணிற் குடையப்பட்ட பெரிய வளைகளுள் பதிந்து கிடக்கும். ஆதிபன் அனுக்கிரகத்தால் சிறிது உஷ்ணம் பட்டுப் பனிக்கட்டிகளுடைந்து அவை நீங்கித் தரை கண்ணுக்குப் புலப்படவே ஆறு ஏழு மாதமாக யோகஞ் செய்துகொண்டிருந்த இப் பிராணிகள் மிகக் களிப்புடன் வெளிப்படும். மானிட யோகிகள் தேஜோன்மயமான கடவுளைக் காணும்பொருட்டு யோகத்தி லிறங்குகிறுர்கள். இச்சீவ ஜந்துக்களோ தம்முடைய ஒளியால் இருட்டை நீக்கி உலக முழுவதையும் உற்சாகப்படுத்துஞ் சூரியனைக் காண்டற்குத் தரையின் கீழ்த் தவம்புரிகின்றன.

வேறு சில பிராணிகள் வருஷக்கணக்காக உறக்கங்கொள்ளும். இவற்றைப் பார்க்கப் பூதக்கண்ணுடி யுபயோகிக்க வேண்டும். இவை ஆறுகளிலும் குளங்களிலும் ஏரிகளிலும் அபரிமிதமாயுண்டு. இவை யங்குமிங்கும் நடப்பதற்கு ஏதுவாயிருப்பது இவற்றின் தலையின்கீழ் சக்கரம்போன்ற ஓர் அங்கம். அவ்வங்கம் ஓயாது சுழலுவதால் இவற்றிற்குச் சக்கரக் கிருமிகள் என்று பெயர். இச்சிறு பிராணிகளுள் சிலவற்றைப் பிடித்து ஒரு சமமான வெள்ளைக் கண்ணுடித் துண்டின்மேல் சிறிது தண்ணீரோடு வைத்து பூதக் கண்ணுடியால் நோக்க, தண்ணீருள்ளளவும் கண்ணுடியின்மேல் அங்குமிங்கு மோடும். தண்ணீர் சிறிது சிறிதாய் நீராவியாக மாறவே இவற்றின் சுறுசுறுப்பும் நிற்கத் தொடங்கும். கடைசியில் நீர் முழுவதும் மறையவே, இவை தஞ் சக்கர வங்கத்தை உள்ளிழுத்து, ஓடுதல் நின்று, உயிரிழந்த பிணம்போல் கிடக்கும். அவ்வமயத்துத் தம்மைச் சுற்றிக் கண்ணுடிபோன்ற ஒரு வஸ்துவால் ஒரு கூடு கட்டிக்கொள்ளும். அக்கூட்டிலிருக்குங் காலத்தில் உண்ணுவதில்லை; சுவாசம் விடுவதில்லை; ஓரே உறக்கந்தான். இக்கூட்டிற்குள் மூன்று வருஷப்போது இருக்கும். பிறகு முன்போல ஒரு கண்ணுடியின்மேல் வைத்துச் சிறிது தண்ணீர் சேர்த்து பூதக்கண்ணுடியால் பார்த்தால், கூடுடைந்து இச்சிறு பிராணிகள் வெகு சுறுசுறுப்பாய் வெளியிற் போந்து, சிறையினின்று விடுபட்டவன்போல் ஆனந்தத்துடன் ஆடும். இவை இவ்வண்ணம் உயிர் காப்பாற்றிக்கொள்வதற்குக் காரணம் என்னையோவெனின், ஆறு குளங்கள் மாதக்கணக்காய்த் தண்ணீர் வற்றிப்போகின்றன. அக்காலத்து இப்பிராணிகள் தம்மை வேறு எவ்விதத்தால் காப்பாற்றிக்கொள்ளும்? சிறு கூட்டிற்குள் ஆறு வரிகளில் தண்ணீர் வருமளவும் அபாயமின்றி வாழும்.

சமாசாரக் குறிப்புகள்.

1. ஜீ. ஹி. நி. சங்கத்து நிர்வாக சபையார் சென்ற மார்ச்சு மாதத்தில் சபை கூடியபோது சங்கத்து வேலைகளை இப்போதைவிட நன்ருய்ப் பார்த்து வருவதற்காகச் சென்னையில் ஒவ்வொரு டிவிஷனிலும் சில பேரை நிர்வாக சபையாராக ஏற்படுத்திக் கொள்ள வேண்டியதென்றும், போலீஸ் சட்டத்தின் 53-வது பிரிவுப்படி அவர்களைப்

போலீஸ் உத்தியோகஸ்தர்களாக நியமிக்கப் போலீஸ் கமிஷனரவர்களுக்கு இச்சங்கத்துக் காரியதரிசி மனு செய்யவேண்டியதென்றும் தீர்மானிக்கலாயிற்று.

---

2. சென்னையில் சென்ற ஏப்பிரல்மீ 24வ சாயுங்காலம் மவுண்ட்ரோட்டிலிருக்கும்மிஸ் குவித் துரையவர்களின் கட்டடத்தில் "பாலகர் பாலன சங்கம்" என்னும் ஓர் சங்கத்தைச் சென்னபட்டணத்தில் ஏற்படுத்த சபையொன்று கூட்டப்பட்டது. அச்சபையில் கனம்பொருந்திய ஜட்ஜி வாலீஸ் துரையவர்கள் அக்கிராசனம் வகித்தனர். திக்கற்ற குழந்தைகளைப் போஷித்து நல்ல மார்க்கத்தில் திருப்பி, முதிர்ந்த வயதில் அவர்கள் தமக்கும், தம் தேசத்துக்கும் உபயோகமான தொழில்களில் பிரவேசித்துப் பாடுபடும்படிச் செய்ய மேற்கண்ட பெயரால் ஓர் சங்கத்தை யேற்படுத்தி, அச்சங்கத்தின் காரியங்களை நடத்திவரப் பல கனவான்களையும் சீமாட்டிகளையும் நிர்வாக சபையாராக நியமித்தார்கள். இருபத்தேழு வருஷகாலமாய் நடந்துவருகிற ஜீவஹிம்சை நிவாரண சங்கம் வாயில்லா ஜந்துக்களுக்கு எவ்வளவு நன்மை அளிக்கின்றதோ அதைவிட அதிகமான நன்மையைப் பாலகர்களுக்கு இப்புதிய சங்கம் பயக்கவேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திக்கின்றோம்.

---

3. சென்ற ஏப்பிரல்மீ 17வ யன்று மதுராஜில்லாவில் விவசாயத்தொழில்அபிவிருத்திக்காக ஏற்பட்டிருக்கும் சங்கத்தாரால் மதுரையில் அவாது தோட்டத்தில் கால்நடைகளின் காட்சி யொன்று ஆரம்பிக்கப்பட்டது. அக்காலத்தில் அடிஷனல் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட் ஏ. எப். பிரயண்ட் துரை சபாநாயகராய் வீற்றிருந்தார். ம-ா-ா-ஸ்ரீ, பாண்டித் துரைசாமித் தேவரவர்கள் முதலிய பல கனவான்களு மிருந்து அக்காட்சியை நடத்தினார்கள்.

---

4. கோயமுத்தூர் ஜில்லா திருப்பூரில் ஜூன்மீ 14வயில் கால்நடைகளின் காட்சியொன்றுவைப்பதற்காகமேமீ 4வயில் கோயமுத்தூர் காலேஜ் ஹாலில் கலெக்டர் கௌளக்துரை முதலான கனவான்கள் சபை சேர்ந்து வேண்டிய ஏற்பாடுகள் செய்தார்கள். பிரதி ஜில்லாவிலும் வருஷா வருஷம் இப்படிப் பட்ட காட்சிகள் நடந்துவந்தால் நாட்டுக் குண்டாகக்கூடிய நன்மைக ளநேகமுள.

---

5. நீலகிரி உதகமண்டலத்தில் மேமீ 15வ காலையில் குதிரைகளின் காட்சி யொன்று ஆரம்பித்தபோது, மாட்சிமைபொருந்திய கவர்னர் துரையவர்கள், மைசூர் மஹாராஜா அவர்கள், மற்று மநேகம் பிரபுக்களு மிருந்து அக்காட்சியை மிக உற்சாகத்துடன் நடத்தினார்கள்.

---

6. பல ஆண்டுகளுக்குமுன் நம்முடைய ஜீ. ஹி. நி. சங்கத்திற்குச் சில வருஷகாலம் காரியதரிசியாயிருந்து வந்த டி. ஏ. மெக்கிரீடி துரையவர்கள் புதுச்சேரியில் 56-வது வயதிலேயே இறந்துவிட்டதாகச் சமாசாரம் கேட்க மிக்க வியசனமாயிருக்கிறது. அவர் சென்னையில் ஜெயில் சூப்பரின்டென்டெண்ட் உத்தியோகத்திலிருந்து வந்தபோது பல சங்கங்களின் காரியங்களை அதிக உற்சாகத்துடனும் சிரத்தையுடனும் நடத்திவந்தார். தேக அசௌக்கியத்தால் இரண்டு வருஷத்துக்குமுன் உத்தியோகத்தைவிட்டுப் பென்ஷன் பெற்றுக்கொண்டார்.

---

7. விசேஷ சிரத்தையுடன் தன் உத்தியோக காரியங்களிலும் பொதுஜன நன்மைக்குரிய காரியங்களிலும் மிக்க பாடுபட்டுவந்த கனம்பொருந்திய ஜட்ஜி பாடெம் துரையவர்கள் தம்முத்தியோககாலம் முடித்துக் கொண்டு, பென்ஷனின்பேரில் தாம் சீமைக்குப் புறப்பட்ட மறுதினமே இறந்துவிட்டதாகச் சகலரும் விசனப்படத்தக்க சங்கதியைக் கேட்க ஆலோசனை சபையில் வீற்றிருக்கும் மாட்சிமைதங்கிய கவர்னர் துரையவர்களுக்கு அபாரமான துக்கமாயிருக்கிறதாகச் சென்னை இராஜதானி கெஜெட்டில் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1908.

இராஜா வேணுகோபால பஹதூரவர்கள் ஜந்து வைத்தியசாலை,
சென்னை ஜீ. ஹி. ஙி. சங்கம்.



Rajah Venugopala Bahadur's Hospital for Animals,
S. P. C. A., Madras.